பக்கங்கள் ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2026 கார்த்திகை 14 வியாழக்கிழமை (30-11-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 4

# வடபகுதியிலிருந்து வருவோர் கொழும்புக்கு செல்லத் தடை!

## படையினரின் புதிய உத்தரவு

வவுனியா. நவம்பர் 30

வடபகுதியிலிருந்து வவுனியாவுக்கு வருவோர் கொழும்பு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கின்றது.

பாதுகாப்புப் படையினரால் விதிக்கப்பட்டுள்ள இந்தப் புதிய தடை உத்தரவு நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணி முதல் வவுனியாவில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

கொழும்பு நகரின் பாதுகாப்புக் கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக ஸ்ரீலங்கா அரசின் பாதுகாப்பு பிரிவினர் தெரிவித்திருக்கின்றனர்

வவுனியாவில் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கு நிரந்தர அனுமதிப் பத்திரம் வழங்கியுள்ள ஸ்ரீலங்காப் படையினர் வடபகுதியிலிருந்து கொழும்பு மற்றும் தென்பகுதிப் பிரதேசங்களுக்குச் செல்வதற்காக வவுனியாவுக்கு வரும் பொதுமக்களுக்கு தற்காலிக அனுமதிப் பத்திரம் வழங்கி வருவது தெரிந்ததே.

புதிய உத்தரவுப்படி —

தற்காலிக ''பாஸ்'' பெற்றவர்கள் கொழும்பு செல்ல

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். நகரில் ஆயிரம் புலிகளாம்

கொழும்பு, நவ. 30

யாழ். நகருக்குள் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் ஆயிரம் பேர் வரை நிலைகொண்டு, முன்னேற முயலும் படையினருடன் கடுமையாக மோதி வருகின்றனர்

பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி.

(6 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் ஹெலி சேதம்!

கொழும்பு, நவ. 30

சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான எம். ஐ.24 ரக ஹெலிக் கொப்டர் ஒன்று விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் சேதமடைந்துள்ளது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு பகுதியில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடச் சென்று கொண்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் அதன் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தாக்குதலுக்கு இலக்கான ஹெலி பத்திரமாகத் தரையிறங்கியதாகவும் - அதன் ''ராடர்'' கருவிகள் சேதமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

ஹெலிக்கொப்டர் சேதமடைந்ததை ஒப்புக் கொண்ட பாதுகாப்பு வட்டாரங்கள் திருத்த வேலைகளின் பின் அது மீண்டும் தக்குதல் நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் என்று தெரிவித்தன.

(ஐ-3-6)

# படையினர் அறுவரை புலிகள் விடுவித்தனர்!

வடமராட்சி, நவ. 30

கடந்த காலங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைது செய்யப்பட்ட ஸ்ரீலங்காப் படையினர் ஆறு பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டனர்.

நேற்று பிற்பகல் 2 மணியளவில் இந்த ஆறு பேரையும் விடுதலைப் புலிகளிடமிருந்து பொறுப்பேற்ற செஞ்சிலுவைச்சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள், அவர்களை ''ஹபறண'' கப்பல் மூலம் காங்கேசன் துறைக்குக் கூட்டிச் சென்று, பலாலியில் வைத்து படை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

விடுவிக்கப்பட்ட ஆறு படையினரதும் பெயர்கள் வருமாறு:-

★ டி. டபிள்யூ ஆராச்சிகே கொட்வின் விஜேசிங்க

★ ஆர். கே. சுசில் வைஜிர குமார பெரேரா

★ களுலியனகே உபுல் சாந்த

★ வலகுலகே கருணாரத்ன

★ உக்குபண்டா ஜெயரட்ணா

★ சமரநாயக்கா முடியாண்சலாகே சாந்த குமார.

(உ-173)

## படை முன்னேறும் முயற்சி முல்லையில் முறியடிப்பு!

### இராணுவத்தை புலிகள் விரட்டினர்

சாவகச்சேரி, நவ. 30

நேற்றுக்காலை 7 மணியளவில் முல்லைத்தீவு இராணுவ முகாமில் இருந்து பெரும் எடுப்பில் முன்னேற முயன்ற ஸ்ரீலங்கா இராணுவத்தினரின் முயற்சியை விடுதலைப் புலிகள் முறியடித்துள்ளனர்.

புலிகளின் தாக்குதலுக்கு முகம்கொடுக்க முடியாத நிலையில் சேதங்களுடன் இராணுவத்தினர் பின்வாங்கி ஓடிவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

படையினரின் முன்னேற்ற முயற்சி தண்ணீரூற்று மூன்றாம் கட்டைப் பாலத்துடன் முறியடிக்கப்பட்டது. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகளுக்கு எதுவித சேதமும் ஏற்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

(உ-3)

## எட்டுப் பொது மக்கள் படையினரால் விடுவிப்பு

### நேற்றிரவு வந்து சேர்ந்தனர்

வடமராட்சி, நவ. 30

ஸ்ரீலங்காப் படையினரால் அண்மைக் காலத்தில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் வைத்து பிடித்துச் செல்லப்பட்ட எட்டுப் பேர் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

பலாலி முகாமிலிருந்து விடுவிக்கப்பட்ட இந்த எண்மரும் நேற்று இரவு 7-30 மணியளவில் 'ஹபரண' கப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்குக் கூட்டிவரப்பட்டனர்.

இந்த எண்மரையும் பொறுப்பேற்று கூட்டி வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவினர் நேற்று இரவு அவர்களை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியில் தங்க வைத்தனர்.

இன்று பிற்பகலில் கொடிகாமம் — புத்தூர்ச் சந்திப் பகுதியில் உள்ள தமிழர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# யாழ். நகரை நோக்கி நகர முயலும் படைகள் மீது தொடர்ந்து தாக்குதல்

சாவகச்சேரி, நவ. 30

உச்சப் பலத்தைப் பரயோகித்தவாறு யாழ். நகரை நோக்கி நகர முயலும் இராணுவத்தினரை எதிர்கொண்டு கடும் சமர் புரிந்துவரும் விடுதலைப்புலிகள், இராணுவத்தினருக்கு பெரும் சேதத்தை ஏற்படுத்தி வருவதாக அறிவிக்கப்படுகின்றது

பல முனைகளால் படையினர் முன்னேற முயன்ற போதும் எதிர்பார்த்த நகர்வை குறித்த காலத்துக்குள் அடையமுடியாத இராணுவத்தினர் தவிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இழப்புக்களை ஈடுசெய்யக் கூடுதலான துருப்புக்களும், யுத்த வாகனங்களும் களத்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தலைகீழாகத் தொங்கவிட்டு படையினர் சித்திரவதை!

### விடுவிக்கப்பட்டவர் தெரிவிப்பு

வடமராட்சி, நவ. 30

''பலாலி முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த சமயம் கடும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டோம்''

—நேற்று ஸ்ரீலங்காப் படையினரால் பலாலியிலிருந்து விடுவிக்கப்பட்ட எட்டுப் பொதுமக்களில் ஒருவர் விடுதலையின் பின் நேற்று மாலை 'உதயன்' செய்தியாளரிடம் இவ்வாறு குறிப்பிட்டார்.

கைது செய்யப்பட்ட பின்னர் ஒரு நாள் முழுவதும் தன்னை படையினர் தலைகீழாகக் கட்டித் தொங்கவிட்டுத் தாக்கியதாகவும்—

இதேபோன்று அங்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த ஏனையோரும் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்ட

(6 ஆம் பக்கம் பார்க்க)

# கிளாலி கடலில் படகுகளில் சென்றோர் நேற்று கைது!

சாவகச்சேரி, நவ. 30

நேற்றுக்காலை 10 மணியளவில் ஆலங்கேணியில் இருந்து கிளாலியை நோக்கி வந்து கொண்டிருந்த 3 படகுகளில் இரு படகுகளில் வந்தவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். படகுகளும் படையினரால் கைப்பறறப்பட்டன.

[illegible] வந்த கடற்படையினரே இவர்களைக் கைது செய்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை கிளாலி கடலில் வைத்து 14 கண்ணாடி இழைப் படகுகள் பிடிக்கப்பட்டதாகவும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்புலி பாதுகாப்புடன் இனி இரவில் கிளாலி சேவை

சாவகச்சேரி, நவ. 30

இன்று முதல் மாலை 6 மணி தொடக்கம் அதிகாலை 6 மணி வரை — இரவில் மட்டும் — கிளாலி படகுச் சேவை நடைபெறும் என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தப் படகுச் சேவைக்கு கடற்புலிகள் பாதுகாப்பு வழங்குவர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதிய பங்கீட்டு அட்டைக்கு திங்கள் முதல் மா கிடைக்கும்

சாவகச்சேரி, நவ. 30

பொதுமக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் எதிர் வரும் திங்கட்கிழமை முதல் மா விநியோகிக்கப்படவிருக்கிறது.

புதிதாக வழங்கப்படவிருக்கும் பங்கீட்டு அட்டையை ப.நோ.கூ. சங்கங்களில் காட்டி மாவைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை—

நிவாரணப் பொருட்களுடன் நாளை பருத்தித்துறைக்கு வந்து சேரவிருக்கும் ''லங்கா கல்யாணி'' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டதும்—

இடம் பெயர்ந்தவர்களுக்கு ஒருவார உலர்உணவு நிவாரணம் வழங்கப்படவிருப்பதாகவும்— தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

## நந்திக் கொடிகளும் யாழ். நகரில் ஏற்றப்படுமாம்

### அவை பலாலிக்கு வந்து சேர்ந்தன

கொழும்பு, நவ. 30

யாழ். நகரை படையினர் கைப்பற்றியதும் அங்கு சிங்கக் கொடிகளுடன் யாழ். மாவட்ட நந்திக் கொடிகளும் பறக்க விடப்படும் என்று கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

இது பற்றிய தீர்மானத்தை அரசாங்க மேலிடம் எடுத்திருப்பதாகவும் —

யாழ். நகரைத் தங்கள் பூரண கட்டுப்பாட்டுக்குள் படையினர் கொண்டு வந்ததும் அங்கு பறக்கவிடுவதற்காக நூற்றுக்கும் மேற்பட்ட நந்திக் கொடிகள் பலாலிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகவும் அரசாங்க வட்டாரங்கள் கூறியிருப்பதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### செயலகத்தில்

## இன்னும் ஓரிரு தினங்களில் ஓய்வூதியக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். செயலகத்தில் ஓய்வூதிய வவுச்சர்களைப் பெற்றவர்களுக்கான கொடுப்பனவை வழங்குவது இன்னும் ஓரிரு தினங்களில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட கருமபீடத்தில் இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

போதிய பணம் இல்லாத காரணத்தால் இக் கொடுப்பனவை வழங்குவது கடந்த சில தினங்களின் முன் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தேவையான பணம் கிடைத்ததும் இன்னும் ஓரிரு நாள்களில் மீண்டும் கொடுப்பனவை வழங்கக் கூடியதாக இருக்கும் என செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

செயலகத்தில் தமது வவுச்சர்களைப் பெற்றவர்கள் இந்த விசேட கருமபீடத்தில் மட்டுமே தமது கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் —

அவர்கள் தங்கள் வவுச்சர்களை வங்கிகளில் வைப்பிலிட முடியாது என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

செயலகத்தில் வழங்கப்பட்ட வவுச்சர்களுக்கான மொத்த தொகைக்குரிய காசோலை வங்கிக்கு அனுப்பப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)


## ஸ்கந்தவரோதயக் கல்லூரி

### சுன்னாகம்

ஆசிரியர், ஊழியர்கள் சம்பளக் காசோலைகள் திரு. A.P. செல்லையா, அதிபர், 187 ஆம் கட்டை, கண்டி வீதி, மீசாலையில் 30 - 11 - 95 வியாழன் தொடக்கம் மூன்று தினங்கள் நண்பகள் 12 மணிவரை வழங்கப்படும்.

க. புவனேந்திரநாதன்
பிரதி அதிபர்

[39417]



## கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர் சம்பளம்

கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியர்கள் (1-12-95) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை தங்கள் தங்கள் வேதனக் காசோலைகளை சாவகச்சேரி கல்வித்திணைக்களத்தில் பெற்றுக்கொள்ளவும்.

இ. மகேந்திரன
அதிபர்,
கொக்குவில் இந்துக் கல்லூரி.

(சி-3117)



## தேவை

உடை தயாரிப்பதில் அனுபவமுடைய பெண்கள் தேவை

1-12-95 முன் நேரில் தொடர்பு கொள்க

பணிப்பாளர்,
மகளிர் அபிவிருத்தி நிலையம்

மே/பா திருமதி புஷ்பா கணேசலிங்கம்
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
புத்தூர் சந்தி,
மீசாலை. (39308)


### கடந்த இரு தினங்களில்

## 20க்கு மேற்பட்ட இளைஞர்-யுவதிகள் மண்மீட்புப் போராட்டத்தில் இணைவு

சாவகச்சேரி, நவ 30

கடந்த ஓரிரு தினங்களில் 20க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் விடுதலைப் புலிகளுடன் போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

இவர்களில் பாடசாலை ஆசிரியர்களும் அடங்குவர்.

வன்னி பெரு நிலப்பரப்பில் 50 க்கும் மேற்பட்டவர்கள் விடுதலைப் புலிகளுடன் தம்மை இணைத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மாவீரர் தின உரையில் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஏராளமான இளைஞர்கள், யுவதிகள் இணைவதாக தெரிவிக்கப்பட்டது.

அவர்களிடையே புது உற்சாகம் பிறந்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது என்றும் —

எதிர்வரும் நாட்களில் கூடுதலானவர்கள் விடுதலைப்புலிகளுடன் இணைவார்கள் என எதிர் பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## இடம்பெயர்ந்த மக்களுக்கு ஜப்பான் உதவி

கொழும்பு, நவ. 30

வடக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு உதவுவதற்காக ஜப்பானிய அரசாங்கம் 2 கோடி 10 லட்சம் ரூபாவை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கு வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க இந்த நிதி பயன்படுத்தப்படும் என்று ஜப்பானிய தூதரகம் தெரிவித்துள்ளது. (இ-3)

## வலயம் II பணிமனை கரவெட்டியில்

பருத்தித்துறை, நவ 30

யாழ். வலயம் இரண்டு கல்விப் பணிமனை கரவெட்டி புனித இருதயக் கல்லூரியில் தற்காலிகமாக இயங்கி வருகிறது. (ஐ-118)

## அதிபர்கள் கலந்துரையாடல்

சாவகச்சேரி, நவ. 30

வலயம் ஒன்று, இரண்டு ஆகியவற்றைச் சேர்ந்த 1ஏபி, 1ஸி ஆகிய பாடசாலைகளின் அதிபர்களுக்கான முக்கிய விடயங்கள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சாவகச்சேரி இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளது.

வடமாகாண அதிபர்கள் சங்கம் இக்கலந்துரையாடலை ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-3)

## அமெரிக்க பத்திரிகை கருத்து

நியுயோர்க், நவ. 30

சிறுபான்மையினரான தமிழர்களுக்கும் அரசுக்கும் இடையே நடக்கும் போரை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் சமாதானத்தைக் கொண்டுவர உதவ வேண்டும் என்ற தேவை வெளிநாட்டுத் தரப்பினருக்கும் உள்ளது.

அமெரிக்காவில் வெளியாகும் 'த பொஸ்ரன் குளோப்' பத்திரிகை இவ்வாறு கருத்து வெளியிட்டிருக்கிறது. (ஐ)


## உடன் அறியத்தரவும்

ஆனைப்பந்தியில் வசிக்கும் திரு. கெங்காதரசிவம் அவர்கள் கீழ்காணும் முகவரிக்கு தொடர்பு கொள்ளவும்.

திரு. க.சோ. நடராசா
C/o. திரு. குலசிங்கம்
(மாஸ்டர்),
கந்த உடையார் ஒழுங்கை,
பருத்தித்துறை.
(39305)


## மண்டைதீவுக் கடலில் சூடு! மீனவர் இருவர் காயம்!!

சாவகச்சேரி, நவ. 30

மண்டைதீவுக் கடற் பரப்பில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்கள் மீது படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டினால் இரு மீனவர்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் இருந்து இடம்பெயர்ந்து மறவன் புலோ பகுதியில் வசிக்கும் செல்வராசா விஜயராசா [வயது 15], இராசேந்திரம் குணபாலு [வயது 23] ஆகிய இருவருமே படுகாயமடைந்தனர்.

காயமடைந்த இவர்கள் இருவரையும் கூடச் சென்ற மீனவர்கள் மீட்டு கரைக்கு கொண்டு வந்து சேர்த்தனர்.

இவர்கள் இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## இறுதி வீரவணக்கமும் வித்துடல்கள் விதைப்பும்

வலிகாமம் பகுதியில் நடையெற்றுவரும் சமரில் கடந்த செவ்வாயன்று வீரச்சாவடைந்த வீரவேங்கை முரளிதரன் (இராசதுரை ஜெயக்காந்தன் — (மயிலிட்டி த.மு:-2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை), வீரவேங்கை கேசவன் (திருநாமம் தேவரஞ்சன் — உடுத்துறை) ஆகிய போராளிகளின் வித்துடல்கள் இன்று இறுதி வீரவணக்கத்தை தொடர்ந்து வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்படும்.

★ ★ ★

'சூரியப்பிரகாசம்' நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையினருடன்கடந்த செவ்வாயன்று இடம்பெற்ற மோதலில் வீரச்சாவடைந்தவீரவேங்கை மணாளனின் (மரியதாஸ் அல்பிரட் — மன்னார், த.மு.-கொய்யாத்தோட்டம்) வித்துடல் இன்று வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிவரை தென்மராட்சி கோட்ட மாவீரர் பணிமனையில் பெற்றோரின் வருகைக்காக வைக்கப்பட்டிருக்கும்

பின்னர் அல்லாரை ஆனந்குடியிருப்புக்கு எடுத்துச் செல்லப்பட்டு மக்களின் இறுதி வீரவணக்கத்துக்காக வைக்கப்படும்.

பின்னர் அங்கிருந்து கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு புனித விதை குழியில் விதைக்கப்படும். (ஐ)

## புலமைப் பரிசில் பரீட்சை இம்முறை வடக்கில் இல்லை

கொழும்பு, நவ. 30

வடமாகாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களில் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவிருக்கிறது.

சுமார் 3 லட்சம் மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுவர். யாழ்ப்பாணம், முல்லைத்திவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சை பிறிதொரு தினத்தில் நடத்தப்படும் என்று பரீட்சைப்பகுதி ஆணையாளர் நாயகம்ரசல்குணரத்தின தெரிவித்தார். (ஐ-3)

## குண்டுச் சத்தங்கள் குறித்து மேலும் தகவல்

கொழும்பில் கடந்த திங்களன்று கேட்ட பெரும் குண்டுச் சத்தங்கள் சந்தேகத்துக்கிடமான சில பொதிகளை அழித்தபோது ஏற்பட்டவை என்று தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு நகரில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட சந்தேகத்துக்கு இடமான சில பொதிகளை குண்டுகளைச் செயலிழக்கச் செய்யும் பிரிவினர் வெடிக்க வைத்தனர் என்றும்—

அதனால் எழுந்த பெரும் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கொழும்பு நகர் எங்கும் பெரும் களேபரத்னத ஏற்படுத்தியதாகவும் வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இக் குண்டு வெப்புச் சத்தங்கள் பானடுவ பொலீஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி நடவடிக்கைகளின் போது ஏற்பட்டன என்று பாதுகாப்பு அமைச்சு முன்னர் அறிவித்திருந்தது தெரிந்ததே (ஐ-6)

## படையினர் வென்றாலும் அமைதி ஏற்படமாட்டாது

### வை. பி. சில்வா கூறுகிறார்

அரசாங்கப் படைகள் வெற்றிபெற்றாலும் அரசியல் தீர்வு இன்றி அமைதி ஏற்படாது.

இவ்வாறு கொழும்பு மாவட்ட எம்.பியான மக்கள் கட்சித் தலைவர் வை. பி. சில்வா மாத்தறையில் தெரிவித்தார்.

தற்போது நடைபெற்று வரும் வடக்கு—கிழக்கு யுத்தத்தில் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்து அரச படைகள் வெற்றி பெற்றாலும் அரசியல் தீர்வு ஒன்று இல்லாமல் அப்பகுதியில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முடியாது என்றும் அவர் கூறினார். (இ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவிடுதலையை வென்றெடுக்கும் வரலாற்றுக்கடமை எமக்கு உண்டு

## மண்மீட்புப் போரில் இணைந்த ஆசிரியர் கூறுகிறார்

வடமராட்சி, நவ. 30

இனவிடுதலையை வென்றெடுக்க வேண்டிய வரலாற்றுக் கடமை எமக்கு உண்டு. இந்த வரலாற்றுக் கடமைக்குள் நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

இவ்வாறு தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்ட துன்னாலை கிழக்கைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவர் (வயது 41) தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு கடந்த 13 வருடங்களாக நான் ஆதரவாளராகஇருந்துவருகிறேன். இந்த 13 வருட காலத்திலும் தமிழீழ விடுதலை பற்றித்தான் நான் சிந்தித்து வந்துள்ளேன்.

1983 ஆம் ஆண்டு பதுளையில் நான் படிப்பித்த போது கலவரத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டேன்.

சுமார் ஒருவாரகாலம் அங்குள்ள பாடசாலை ஒன்றில் ஒளித்திருக்க வேண்டிய நிலை எனக்கு ஏற்பட்டது.

அதற்குப் பின்னர் பொலீஸாரின் உதவியுடன் மட்டக்களப்புக்கு கொண்டுவரப் பட்டேன். நானும் என்னுடன் இருந்த ஏனையோரும் பின்னர் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டோம்.

இது தவிர புதுக்குடியிருப்பில் இடம் பெற்ற குண்டு வீச்சில் நான் காயமடைந்தேன்.

விடுதலைப் போராட்டத்தின் தன்மைகளை எமது மக்கள் இன்னமும் உணராமல் இருப்பது மிகவும் கவலைக்குரிய விடயமாகும்.

### மாணவர் பங்கு போதாது

ஆனால் ஒன்று மட்டும் நிச்சயம்—அதாவது தமிழீழ மாணவர்கள் இன்னமும் முழுமையாக விடுதலைப் போராட்டத்தில் இணையவில்லை. என்றாலும் இன்னமும் 3 அல்லது 4 வருடங்களுக்குள் மாணவர்கள் அனைவரும் போராட்டத்தில் இணைவது நிச்சயம்.

இனவிடுதலையை வென்றெடுக்கும் வரலாற்றுக் கடமை எனக்கு மட்டுமல்ல, அனைத்து ஆசிரியர்கள் மாணவர்களுக்கும் உரியதாகும்.

இதன் மூலம் எமது விடுதலையைவென்றெடுக்கலாம்.

விரைவில் மாணவர்கள் எல்லோரும் விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டு விடுவார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

எமது தேசியத் தலைவரின் காலத்தில் தான் தமிழினத்துக்கு விடுதலை கிடைக்கும் என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறு அவர் சொன்னார்.

(இ-173)

# போராட்டத்தில் மகனை இணைத்தார் தாய்

தாளையடி, நவ. 30

வடமராட்சி கிழக்குக்கோட்டத்தில் செவ்வாயன்று மட்டும் ஒன்பது இளைஞர்கள் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்தனர்.

இவர்களில் செல்லையா சாந்தகுமார் என்ற இளைஞரை அவரது தாயார் தாமே கூட்டி வந்து விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்தார்.

இரண்டாவது லெப். வீரையனின் தந்தை சின்னத்தம்பி கந்தசாமியும் தமது மூன்றாவது மகனையும் போராட்டத்தில் இணைந்து கொள்ள அனுப்பி வைத்தார்.

வடமராட்சி கிழக்கில் நாளாந்தம் பெரும் எண்ணிக்கையான இளைஞர்களும், இளம்பெண்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இணைந்து வருவதாக இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

# பாட்டாளி மக்கள் கட்சி ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணத்தில் மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதற்கு கண்டனம் தெரிவித்து பாட்டாளி மக்கள் கட்சியினர் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

உதக மண்டலத்தில் உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் முன்னால் பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸ் தலைமையில் இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது. (ஐ)

# புலிகளை அழிப்பதாக கூறிக்கொண்டு தமிழரை அழிக்கவே படை எடுப்பு

## மக்கள் இடம் பெயர்ந்ததால் அரசின் திட்டம் தோல்வி

கடந்த ஞாயிறன்று இரவு முகமாலை இந்திரபுரம் கிராமத்தில் இடம்பெற்ற போர்க்கால கருத்தரங்கில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உதவிப் பணிப்பாளர் கந்தண்ணா ஆற்றிய உரையின் தொகுப்பு இங்கே பிரசுரமாகியுள்ளது.

ஸ்ரீலங்கா அரசும், சிங்கள பேரினவாதமும் விடுதலைப் புலிகளை அழிப்பதாக உலகுக்கும், சிங்கள மக்களுக்கும் பிரசாரம் செய்து கொண்டு யாழ்ப்பாணம் மீது படையெடுப்பு என்ற போர்வையில் தமிழ் இனத்தை அழிக்க முயற்சி மேற்கொள்கின்றது.

உரிய காலத்தில் வலிகாமம் பகுதியிலிருந்து மக்கள் வெளியேறியிராவிட்டால் சிங்கள பேரினவாதத்தின் தமிழ் இனத்தை அழிக்கும் திட்டம் வெற்றியளித்திருக்கும்.

வலிகாமம் பகுதியில் மக்கள் இருந்திருப்பின் யாழ்ப்பாணப் பகுதியை நோக்கி ஏவப்படும் ஆயிரக்கணக்கான ஷெல்கள், புக்காரா, சுப்பசொனிக் விமானங்கள் பொழியும் குண்டு மழை ஆகியவற்றால் எத்தனை கோர நிகழ்வுகள் ஏற்பட்டிருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். வயது வேறுபாடின்றி மக்கள் அழிவதை நீங்கள் கண்டிருக்கலாம்.

ஆனால் விடுதலைப் புலிகள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளால் மக்கள் காலம் காலமாக வாழ்ந்த தமது நிலங்களை விட்டு புலம் பெயர்ந்து உயிருடன் வாழும் நிலையேற்பட்டது.

### புலம்பெயர்வு தற்காலிகமானது

மக்களின் புலம்பெயர்வு தற்காலிகமானதே. மக்களின் உயிர்களை மட்டுமல்ல உடைமைகளையும் பாதுகாக்கவே விடுதலைப் புலிகள் இரவு பகலாக படையினரின் ஆக்கிரமிப்பை முறியடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

குறுகிய காலத்தில் எமது மண் மீட்கப்படாவிட்டால் பெரும் அழிவுகள் ஏற்படும் என்பதை இங்குள்ள ஒவ்வொருவரும் மறக்கக் கூடாது.

எமது மண்ணை ஆக்கிரமித்துள்ள எதிரியின் படையெடுப்பை முறியடிக்க எம்மிடம் போதிய படையணிகள் இருக்கவேண்டும். எமதுபடையணியை அதிகரித்து சிங்களப் படையை விரட்டியடிக்கவே எமது தேசியத் தலைவர் தமிழ் இளைஞர்களுக்கும், யுவதிகளுக்கும் பகிரங்கமாக அழைப்பு விடுத்தார்.

எமது மக்களின், மண்ணின் விடுதலையை இன்னொரு நாட்டுக்காரன் பெற்றுத் தர மாட்டான். இந்த நிலையில் எமக்குக் கிடைக்கும் விடுதலை எமது மக்களாலேயே கிடைக்கவேண்டும்; விடுதலை பெற அனைத்து இளைஞர்களும், யுவதிகளும் தாமாகவே முன்வந்து போராட்டத்தில் இணைந்து கொள்ளவேண்டும்.

எமது இளைஞர், யுவதிகளை போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு காலத்துக்குக் காலம் பல்வேறு கோணத்தில் தெளிவாக நாம் எடுத்துக் கூறியுள்ளோம். மக்கள் போராட்டத்துக்குத் தந்த ஒத்துழைப்பின் பயனாகவே சிங்களப் படையினரின் பல முகாம்கள் அழிக்கப்பட்டு பல வெற்றிகளை எமது மக்கள் கண்டார்கள்.

போராட்டத்திற்குச் செல்லும் பிள்ளைகள் இறந்துவிடுவார்கள் என பெற்றோர்கள் கருதினால் இதே பிள்ளைகள் முன்னேறிவரும் படையினரின் தாக்குதல்களால் இறப்பதை தடுக்கமுடியாமல் போய்விடும்.

பிள்ளைகள் நிம்மதியாக வாழவேண்டுமென நினைப்பது பாதுகாப்பானதாக அமைவதை விட அழிவையே ஏற்படுத்தும்.

முன்னேறிவரும் எதிரியின் ஷெல் தாக்குதல்களாலோ, விமானக் குண்டு வீச்சுக்களாலோ உடல் சிதறிப் பலியாகும் பெற்றெடுத்த பிள்ளைகளையோ அல்லது பெற்று வளர்த்த தாயை, தந்தையரையோ அடக்கம் செய்யமுடியாத நிலையில் கையில் அகப்பட்டதை எடுத்துவந்த சம்பவங்கள் எம் மத்தியில் நிகழ்ந்துள்ளன.

நவாலி தேவாலய சம்பவம் எமக்கு வரலாற்று ரீதியாக இதை எடுத்தியம்பும்.

### கல்வியை நாம் தடுக்கவில்லை

மாணவர்களின் கல்வியை நாங்கள் தடுக்கவில்லை. கல்வியைப் பாழடித்தால் வருங்காலத்தில் எமது மண்ணில் புத்திஜீவிகள் இல்லாத நிலை ஏற்படலாம். எமது மண்ணில் உள்ள 8 லட்சம் மக்களில் ஒரு லட்சம் பேர் மாணவர். இவர்களில் 5 ஆயிரம் பேர் போராட்டத்தில் இணைவார்களானால் மிகுதி 95 ஆயிரம் மாணவர்களும் நிம்மதியாக கல்வியைத் தொடர முடியும். இல்லையேல் புலம் பெயர்ந்த மக்களால் நிரம்பி வழியும் பாடசாலைகளில் எவரும் கல்வியைத் தொடரும் வாய்ப்பு இல்லாமல் போய்விடும்.

எமது தேசியத் தலைவரின் அழைப்புக்கு இணங்க இளைஞர்களும் யுவதிகளும் போராட்டத்தில் இணைவார்களாயின் எதிரியினால் அமைக்கப்படும் யுத்த வியூகங்கள் முறியடிக்கப்பட்டு அவன் கொண்டுவரும் கவச வாகனங்களும், ஷெல் மோட்டார்களும் எமது கைக்கு வந்துவிடும்.

கவசவாகனங்களும் ஷெல் மோட்டார்களும் எமது கைக்கு வந்து விட்டால் எமது மண்ணில் படை ஒன்றும் இருக்க முடியாது. எமது மக்கள் நிம்மதியாக சுதந்திரமாக வாழ முடியும்.

இவ் விடுதலைப் போராட்டத்தில் மாவீரர்களானோர் எவருமே தங்கள் சொந்த நலன்கருதி போராடவில்லை.

தனது குடும்பத்திற்கோ அல்லது தனது உறவினர்களுக்கோ அல்லது தனது வீட்டுக்கோ செல்ல வேண்டுமென நினைக்காமல் தமிழ் மக்களினதும், எமது மண்ணினதும் விடிவுக்காகப் பயன்படட்டும் என தம்முயிரைத் தியாகம் செய்தார்கள்.

அவர்களின் கனவை நனவாக்க அனைவரும் போராட்டத்தில் இணைந்து புலிகளின் [illegible] வேண்டும்.

([illegible])

# சாவகச்சேரி நகரில் தினமும் சனக்கூட்டம்

சாவகச்சேரி, நவ. 30

சாவகச்சேரி நகரப்பகுதியில் தினமும் பெரும் சனக்கூட்டம் வருகிறது. தென்மராட்சியின் பலபகுதிகளில் இருந்தும் மக்கள் பல்வேறு தேவைகளுக்காக நகரப்பகுதிக்கு வருவதால் தினமும் காலை நேரத்தில் பெரும் நெரிசல் ஏற்படுகிறது. இதனால் போக்குவரத்து தடைப்படுகிறது.

இடம் பெயர்ந்த மக்கள் ஏற்கனவே பெரும் எண்ணிக்கையில் நகரப்பகுதியில் தங்கியுள்ளனர்,

வங்கிகள், சந்தை மற்றும் முக்கிய அரச அலுவலகங்களுக்கு மக்கள் தினமும் பெரும் எண்ணிக்கையில் வந்து செல்கின்றனர். இதனால் கண்டி வீதி உட்பட நகரை அண்டிய வீதிகளில் சனக் கூட்டம் நிரம்பிக் காணப்படுகிறது.

போக்குவரத்து ஒழுங்கைப் பேணுவதில் காவல் துறையினர் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். (ஐ)

# படையினருக்கு விசேட இழப்பீட்டுத் திட்டம்

## அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, நவ. 30

பாதுகாப்புப் படையினருக்காக விசேட இழப்பீட்டுத் திட்டம் ஒன்றை அரசாங்கம் நடைமுறைக்கு கொண்டு வந்துள்ளது.

இதனால் அவர்களுக்குப் பல நன்மைகளும் இழப்பீடுகளும் கிடைக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

காப்புறுதியில் இருந்து ஓய்வூதியம் வரையும் ஆயுதப் படையினருக்கும் அவர் தம் குடும்பத்தினருக்கும் இத்திட்டம் பல ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

படையினர் ஒருவர் உயிரிழக்கும் போது அவரைச் சார்ந்தவர்களுக்கு ஆகக் கூடுதலான தொகையாக ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

திருமணம் முடிக்காவதராயின் அவரது பெற்றோருக்கு 75 ஆயிரம் ரூபா வழங்கப்படும்.

தற்போது நடைமுறையில் உள்ள ஏனைய திட்டங்களுக்கு மேலதிகமாக இப் புதிய திட்டம் அமுல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஐ)

# அடக்கு முறையை ஒடுக்குவம் வாரீர்!

இடம்பெயர்ந் தெங்களின் மண்ணினை விட்டு
இன்றொடு மாதம் ஒன்றாய்ப் போச்சு.
அடம்பிடித் தாக்கிர மித்து வந்தவர்
அட்ட காசம் அடங்கவே இல்லை.
தடம்புயம் உண்டு; தலைவனின் வழியில்
தமிழா! திரண்டெழு தருக்கர் வீழ்வார்;
திடம்பெற நிற்போம் தீயரை ஒழிப்போம்
தீரத் துடனே திரண்டெழும் வீரரே;
என்ன உண்டு எமக்கினி இங்கே?
மண்ணை மீட்கும் பணிதான் ஒன்று!
எண்ண வேண்டும் இதனை; ஒருகால்
திண்ண ராகத் திக்கெலாம் எழுந்தால்
திரும்பி எதிரிகள் ஓட்டம் எடுப்பார்
இழந்த தென்பது ஒன்றுமே இல்லை
இழக்கப் போவதும் இனியொன் றில்லை
''எப்பவோ முடிந்த காரியம்'' இதில்நாம்
தப்பிப் போக வழியெதும் இல்லை.
இப்போ நாம்செய் செயல்கள் தானே
எப்பவும் எமக்கு எழுச்சியை நல்கும்
அப்பவே எம்மவர் செய்யா ததனால்
இப்போ நமக்கு இன்னலும் துயரும்.
இதனை உணர்ந்து எதிர்வரும் சந்ததி,
இன்பமாய் வாழ எல்லாம் செய்வோம்.
அதனால் தமிழரே! அனைவரும் எழுவீர்
அடக்கு முறையை ஒடுக்குவோம் வாரீர்!

— ஆறுமுகநம்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

**தவறிவிட்டது**

625251680 V செல்வரெத்தினம் விக்னேஸ்வரியின் அடையாளஅட்டை பெருங்குளம் சந்திக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் ஜெயசிங்கம் கராஜ், உதயசூரியன் வீதி கச்சாய் முகவரியில் ஒப்படைக்கவும்.

(39301)


# புதிதாக இரு 'பாஜ்'கள் பருத்தித்துறைக்கு வந்தன

## பொருள்கள் இறக்குவது துரிதம்

யாழ்ப்பாணம், நவ 29

பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்க புதிதாக இரண்டு இழுவைப் படகுகள் (பாஜ்கள்) வந்து சேர்ந்துள்ளன.

இவ்விரு புதிய இழுவைப் படகுகளையும் கொழும்பில் இருந்து 'நில்கிரி' என்றகப்பல் பருத்தித் துறைக்கு கடந்த திங்களன்று கொண்டுவந்து சேர்த்தது.

இவற்றுடன் சேர்த்து தற்போது மொத்தம் ஐந்து இழுவைப்படகுகள் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. இதனால் கப்பல்களில் இருந்து பொருள்களை இறக்குவது விரைவு படுத்தப்பட்டுள்ளது (ஐ-173)


## உடன் தொடர்பு கொள்ளவும்

முன்பு யாழ். உணவுத் திணைக்களத்திலும், தற்போது கொழும்பு தலைமைக் காரியாலயத்திலும் கடமையாற்றும் திரு. எஸ். பஞ்சாட்சரம் என்பவர் கொட்டடி, வில்லூன்றி பிள்ளையார் கோவிலுக்கு அருகே வசித்த தனது தாயாரினதும், அவ்வீட்டுக்கு எதிரே அமைந்திருந்த கடை உரிமையாளரினதும் தற்போதைய வசிப்பிடத்தை அறியவிரும்புகிறார். உடன் தொடர்பு கொள்ளவும்.

K. செல்வராசா
(முன்பு நாவர் வீதி, யாழ்ப்பாணம்)
முதலாவது வீடு,
முதலாம் ஒழுங்கை, [பூங்கா முன் ஒழுங்கை]
1 ஆம் கட்டை, புலோலி கிழக்கு,
பருத்தித்துறை (39413)



## உடன் சந்திக்கவும்

ஊரெழுவைச் சேர்ந்த திருமதி பாராஜசேகரம் அல்லது அவரது மகனை N. நடராசா (வருமானவரி இலாகா, யாழ்ப்பாணம்) என்பவர் பட்டுவில் வடக்கு சாவகச்சேரி (ப. நோ. கூ. சங்கக் கிளை; 10 அருகாமையில்) திரு. க. வினாயகமூர்த்தி ஆசிரியர் வீட்டில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்கிறார்.

தகவல்;
N. நடராசா
([39414)



## உடன் தொடர்பு கொள்ளவும்

48, குமாரசாமி வீதியைச் சேர்ந்த இலட்சுமிப்பிள்ளை நல்லதம்பி என்பவர் குடும்ப அட்டை தொடர்பாக கீழ்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

திரு. திருமதி அ. சொக்கலிங்கம்
மந்திரிமடம்,
[39416] வதிரி, கரவெட்டி, நெல்லியடி


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**திருமதி நவமணி தம்பாபிள்ளை**

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கல்வளை, சண்டிலிப்பாய்.

தோற்றம்: 17-05-1930 மறைவு: 30-11-1994

ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டுகள்
சென்றாலும்
எங்கள் நெஞ்சங்களில் உங்கள் நினைவுகள்
நிறைந்து நிற்கும்

(39296) கணவன், பிள்ளைகள்

## கிளாலியில் நாய்கள் தொல்லை

செம்பியன் பற்று, நவ. 30

கிளாலிக்கரையில் நாய்களின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

குடாநாட்டில் இருந்து வன்னி பெரும் நிலப்பரப்புக்கு இடம்பெயர்வோருடன் அவர்களின் வளர்ப்பு நாய்களும் இளாலி வருகின்றன.

இப்படியாக வரும் நாய்களை சொந்தக்காரர்கள் படகுகளில் மறுகரைக்குச் செல்ல இக்கரையில் தங்க விடப்படுகின்றன.

இப்படியாக கைவிடப்பட்ட நாய்கள் கடலை பார்த்து ஊழையிடுவதாகவும் — விரக்தியினால் அங்கு வரும் பயணிகளை துரத்த முற்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-36)

## கிழக்கு பல்கலைக்கழக துணைவேந்தர்

கொழும்பு, நவ. 30

கிழக்கு பல்கலைக் கழகத்தின் புதிய துணைவேந்தராக யாழ், பல்கலைக்கழக பேராசிரியர் வண. பிதா ராஜேந்திரா நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அவர் நேற்று தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பல்கலைக்கழக மாணவர் உதவிப் பணம்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கலைப்பீடம், சித்த மருத்துவப் பிரிவு ஆகியவற்றைச் சேர்ந்த மாணவர்களுக்கான உதவிப் பணத்தை (7 ஆம், 8 ஆம் தவணைப் பணம்) சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக உப அலுவலகத்தில் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

## படுக்கை விரிப்பு பாய் வழங்கி உதவி

எழுதுமட்டுவாழ். நவ 30

இடம்பெயர்ந்து கொட்டில்களில் வாழும் மக்களுக்கு உதவும் நோக்குடன் அரசசார்பற்ற நிறுவனங்கள் படுக்கை விரிப்புக்கள் பாய்கள், கூடாரங்களுக்கு பாவிக்கும் கூரை விரிப்புகள் போன்றவற்றை வழங்கி வருகின்றன.

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு, தமிழர் புனர்வாழ்வு நிறுவனம், மற்றும் சிறுவர் பாதுகாப்பு நிதியம் போன்ற அமைப்புக்கள் இவற்றை வழங்கிவருகின்றன

வலிகாமத்தில் இருந்து இடம்பெயர்ந்து எழுதுமட்டுவாள், பளை, கிளாலி பிரதேசங்களில் வாழும் குடும்பங்கள் தற்காலிகமாக கூடாரங்கள் அமைத்துக் கொள்வதற்குத் தேவையான சுமார் ... சிறுவர் பாதுகாப்பு நிதியம் அண்மையில் வழங்கியது. (இ-152)


## இடமாற்றம்

யாழ். விக்ரோறியா வீதி, ஆஸ்பத்திரிக்கு பின்புறமாக இயங்கிய

**இரத்தினம் வைண்டிங் வேக்ஸ்**

தற்பொழுது கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகிறோம். (39406)



## நிர்மாணத் திணைக்கள ஊழியர்களுக்கு

நிர்மாணத் திணைக்கள அலுவலகங்கள் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை வளாகத்தினுள் இயங்குகின்றன.

சகல ஊழியர்களும் அங்கு கடமைக்கு சமூகம் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

பிரதம பொறியியலாளர்
(சி/3114 நிர்மாணத் திணைக்களம்



## தொடர்பு கொள்ளவும்

மல்லாகத்திலிருந்து இடம் பெயர்ந்து கொக்குவில் மேற்கில் வசித்த திரு க. சுப்பிரமணியம் அவரது மனைவி திருமதி பாக்கியம் ஆகியோரின் தற்போதைய இருப்பிடம் பற்றியதகவல் தெரிந்தவர்கள் தயவுசெய்து உடன் தொடர்பு கொள்ளவும்.

திருமதி சு. அருந்தவமலர்
C/O திருமதி J. கலாநிதி.

கலாபவனம்
மீசாலை வடக்கு, மீசாலை. (39415)



குழந்தைகள் முதல் பெரியோர் வரை பாவிக்க உகந்த திடீர் உணவு

## ஜீவாகாரம்

தொகையாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

**அண்ணா தொழிலகம்**

ஐயா கடைச் சந்தி, மீசாலை.
(சி-3116)



## எயிட்லைன்ஸ்

★ மருத்துவ ஆய்வுகூடம் ★
★ பற்சிகிச்சை நிலையம் ★

யாழ்ப்பாணம் 193, மின்சாரநிலைய வீதி சாமி & கோ கட்டடத்தில் இயங்கிவந்த எயிட்லைன்ஸ் மருத்துவ ஆய்வுகூடமும், ஆரியகுளம் சந்தியருகில் 60, ஸ்ரான்லி வீதியில் இயங்கிய நடேசன் பற்சிகிச்சை நிலையமும் மந்திகை (மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு அருகில்) சாவகச்சேரி வீதியில் இயங்கி வருகின்றது என்பதை அறியத்தருகின்றோம்.

(சி/3115)



## யாழ். புனித வளன் அச்சகம் ஊழியரின் கவனத்திற்கு

கொடுப்பனவு தொடர்பாக

யாழ் புனித வளன் அச்சக ஊழியர்கள் மிருசுவில் கன்னியர் மடத்தில் வதியும் அருட் திரு. S. J. இம்மானுவல் அடிகளாரை நேரில் சந்திக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

முகாமையாளர்

(39307)



## உடன் விற்பனைக்கு

டாக்டரின் பாவனையிலிருந்த மொறிஸ் ஒக்ஸ்போர்ட் கார்(மண்ணெண்ணெய்க்கு மாற்றியது) மொறிஸ் மைனர் (பெற்றோல்), ஹொண்டா C-90 (Econo-power Ho2) மோட்டார் சைக்கிள், Asia ஆண்கள் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு கொள்ளவும்.

Dr. கருணாகரன்

**விக்னேஸ்வரா களஞ்சியம்**

கண்டி வீதி, சாவகச்சேரி.

]39306)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## இதுவும் அழுத்தமே

வவுனியாவில் தற்காலிக 'பாஸ்' பெற்றவர்கள் கொழும்பு செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு தடை விதித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. கொழும்பு நகரின் பாதுகாப்புக் கருதியே இந்த நடவடிக்கையாம்.

வவுனியாவில் தற்காலிக ''பாஸ்'' பெற்றுத் தங்கி நிற்பவர்களில் அனேகமானோர் வலிகாமத்தில் இராணுவம் நடத்தும் தாக்குதல்களுக்கு அஞ்சி முதலில் தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து —

கொழும்புக்குச் செல்வது பாதுகாப்பு என்று நினைத்து அங்கு பயணமாகும் நோக்குடன் சென்றவர்களே.

இவர்களைக் கொழும்பு செல்லவிடாமல் தடுப்பதற்கான காரணம் என்ன?

கொழும்பிலும், தெற்கின் ஏனைய பாகங்களிலும் விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல்களை நடத்தக் கூடும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் அஞ்சுகின்றன. உண்மையில் அரசுக்குக் குலை நடுக்கம் பிடித்துள்ளது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சி கொழும்பில் பலத்த பந்தோபஸ்து ஏற்பாடுகளை பாதுகாப்பு அமைச்சுச் செய்துள்ளது.

வடக்கில் இருந்து செல்லும் மக்களுடன் சேர்ந்து விடுதலைப் புலிகளும் கொழும்புக்குள் ஊடுருவி விடலாம் என்ற அச்சமே தமிழர்கள் அங்கு செல்வதனைத் தடை செய்வதற்கான காரணம் என்பது மேலோட்டமான கருத்து.

யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கான தாக்குதலைத் தொடர்ந்து அங்குள்ள மக்கள் விதிவிலக்கு இன்றி கூண்டோடு இடம்பெயர்ந்தமை அரசாங்கத்துக்கு ஏற்பட்ட மாபெரும் அரசியல் தோல்வியாகும்

அந்தத் தோல்வியை நினைக்க நினைக்க அரசின் மனம் வேக்காடு கொள்கிறது. அப்போதெல்லாம் வலிகாமம் தமிழர்களை ஏதேனும் ஒரு வகையில் கடுமையாகப் பழி வாங்கத் திட்டமிடுகிறது; உடனே உத்தரவிடுகிறது.

கிளாலிப் பாதையைத் தடை செய்யும் அறிவிப்பு அத்தகைய உத்தரவுகளில் முதலாவது. ஆனால் மக்கள் அந்தத் தடையைப் பொருட்படுத்தவில்லை. தடையை மீறி மிகப்பெரும் எண்ணிக்கையில் கிளாலியூடாக வன்னிக்குச் செல்கிறார்கள்.

அதனைத் தொடர்ந்தே குடாநாட்டுத் தமிழர்கள் கொழும்பு செல்வதைத் தடை செய்யும் உத்தரவை அரசு பிறப்பித்திருக்கிறது.

கிளாலியிலோ, வவுனியாவிலோ எங்கு வைத்து மக்களின் போக்குவரத்துக்குத் தடை விதித்தாலும் அது அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறுவதாகும்.

தமிழர்களின் எந்த அடிப்படை உரிமையையும் எப்படியும் மீறலாம்; அதனை தட்டிக் கேட்பது யார் என்ற போக்கில் அரசு நடந்துகொள்வதால் —

போக்குவரத்துத் தடை போன்று மற்றும் பல அடிப்படை மனித உரிமை மீறல்களை அடுத்தடுத்து நடைமுறைப்படுத்தித் தமிழர்கள் மீது பலவகை அழுத்தங்களையும் போடக்கூடும்.

தட்டிக்கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டம் செய்வது வழக்கம். ஆனால் இந்த அநியாயங்களுக்கு எல்லாம் அரசாங்கம் ஒருநேரத்தில் விலை கொடுக்க நேரிடும். இது உலக நியதி மட்டுமல்ல, நீதியுமாகும்.

## திருமலையில் இருபடையினர் காயம்

கொழும்பு, நவ. 30

திருமலை மாவட்டம் பாலம் போட்ட ஆறு என்னுமிடத்தில் கால் நடையாக ரோந்து சென்ற படையினர் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரு சிப்பாய்கள் காயமடைந்தனர் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்தது. (ஐ)

## பலாலிக்கு வந்து சேரவேண்டிய

# 3 ஆயிரம் துருப்புக்கள் தலைநகரில் தவம்!

பலாலிக்கான விமான சேவைகள் பாதிக்கப்பட்டிருப்பதை அடுத்து தென்பகுதியில் இருந்து பலாலிக்கு அவசரமாக அனுப்பி வைக்கப்பட வேண்டிய 3 ஆயிரம் துருப்புக்கள் கொழும்பில் கடந்த சில நாள்களாகத் தவம் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடபகுதியில் உள்ள பல்லாயிரக்கணக்கான துருப்புக்களுக்குரிய ஒரே விநியோக மார்க்கமான விமானப் போக்குவரத்து கடந்த பல நாள்களாகத் தடைப்பட்டுள்ளது.

விமானப்படையின் வை-8 ரக ராட்சத போக்குவரத்து விமானம் அண்மையில் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது அதன் பின்னர் அன்ரனோவ் - 32 விமானம் காரைநகருக்கு அருகே கடலில் வீழ்ந்து மூழ்கியது.

இச்சம்பவங்களின் பின் போரில் ஈடுபட்டுள்ள படையினருக்கான விநியோகம் தடைப்பட்டிருப்பதாகவும்—

போரில் காயமடையும் படையினரை ஏற்றிச்செல்ல தனியார் விமானங்களைப் படையினர் பயன்படுத்தி வருவதாகவும் 'வெரித்தாஸ்' வானொலி தெரிவித்தது.

## தென்மராட்சிப் பகுதியில் இலையான் பெருக்கம்

தென்மராட்சி, நவ. 30

தென்மராட்சிப் பகுதியில் சுற்றாடல் சுகாதாரம் பேணப்படாததால் இலையான் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது தென்மராட்சிப் பகுதியில் பெருமளவு மக்கள் தங்கியுள்ளதால், அவர்கள் தத்தமது அயல் பகுதிகளைச் சுத்தமாக வைத்திருந்து இலையான் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என பிராந்திய சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இலையான் கட்டுப்படுத்தும் மருந்து கடந்த பல மாதங்களாக கொழும்பிலிருந்து யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்றும் —

இந்நிலையில், பொது மக்களின் ஒத்துழைப்பை தமக்கு அவசியம் தேவை என்றும் —

சுகாதாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

(உ-117)

## சிறிமாவுக்கு எதிராக கேரளவில் ஆர்ப்பாட்டம்

கேரளாவில்சிகிச்சை பெற்றுவரும் ஸ்ரீலங்கா பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு இந்திய டாக்டர்கள் சிகிச்சையளிக்கக் கூடாது என்றுகோரி ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடந்துள்ளது.

பாட்டாளி மக்கள் கட்சித் தொண்டர்கள் கேரள செயலக கட்டடத்துக்கு முன்பாக இந்தப் பேரணியை நடத்தினர்

ஈழத் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதலை நிறுத்த வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

(உ-3-6)

## புதிய பங்கீட்டு அட்டை வீடு வீடாக விநியோகம்

### இன்று முதல் விசேடபணி ஆரம்பம்

சாவகச்சேரி, நவ. 30

அனைத்து குடும்பங்களுக்குமான புதிய உலர் உணவுப் பங்கீட்டு அட்டைகள் இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளன.

பொதுமக்களின் வசதி கருதி இன்றுமுதல் அவற்றை வீடு வீடாகச் சென்று விநியோகிக்க விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக யாழ். அரச அதிபர் திரு. செ.பத்மநாதன் தெரிவித்தார்.

கிராமசேவையாளர்கள் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழுக்கள் இந்தப் பணியில் ஈடுபடவுள்ளன.

வீடுவீடாகச் செல்லும் இந்தக் குழுவினர் பங்கீட்டு அட்டைகளை வழங்குவதற்கான பத்திரங்களைப் பூர்த்தி செய்து உடனேயே அங்கு வைத்து பங்கீட்டு அட்டைகளை வழங்குவர்.

இன்று ஆரம்பமாகும் இந்த அட்டை வழங்கும் வேலை இன்னும் மூன்று நாள்களுக்குள் பூர்த்தியடைந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

புதிய பங்கீட்டு அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்காக அலுவலகங்களுக்கு வீணாக அலைய வேண்டாம் என்று அரச அதிபர் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

உலர் உணவுப் பொருள்களைப் பங்கீட்டு அடிப்படையில் அனைத்து மக்களுக்கும் கிடைக்கச் செய்யும் நோக்கில் புதிய உலர் உணவு பங்கீட்டு அட்டைகள் வழங்கப்படுகின்றன. (ஐ-3)

## வடக்கில் இருந்து செல்லும் புற்றுநோயாளர் தங்க கொழும்பில் இடவசதி

சாவகச்சேரி, நவ. 30

வடபகுதியிலிருந்து மஹரகம புற்றுநோய் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுவதற்காக அங்கு செல்லும் இடவசதிஇல்லாத நோயாளருக்கு உதவும் முகமாக —

கொழும்பு உள்ளக லயன்ஸ் கழகம், தங்குமிட வசதி செய்துள்ளது.

மஹரகம ஆஸ்பத்திரியில் வெளி நோயாளர்களாக சிகிச்சை பெறுபவர்கள் தங்குவதற்கென தெஹிவளையில், ஹில் வீதி, 241ஆம் இலக்கத்தில் நோயாளர் தங்கும் இல்லம் ஒன்று திறக்கப்பட்டுள்ளது.

இந்த இல்லத்திற்கு முன்பிருந்தே மஹரகம ஆஸ்பத்திரிக்கு நேரடியாகச் செல்வதற்கு பஸ் எடுக்க[illegible]

கொழும்பில் [illegible] இடவசதியற்ற நோயாளர்கள் இந்த இல்லத்தில் அவரவர் வசதிக்கு ஏற்ப ஆகக் கூடியது நாளொன்றுக்கு நூறு ரூபாவைச் செலுத்தித் தங்கலாம்.

இந்த இல்லத்தில் தளபாட வசதிகளும், சமையல் வசதிகளும் உண்டு. நோயாளரைக் கூட்டிச் செல்பவர்களும் இடவசதியைப்பொறுத்து இந்த இல்லத்தில் தங்க முடியும்

இந்த இல்லத்தில் தங்க விரும்பும் இடவசதியற்ற நோயாளர்களின் உதவியாளர்கள் கீழ்க்கண்ட லயன்ஸ் கழக உறுப்பினர்களில் எவருடனும் தொலைபேசியில தொடர்பு கொண்டு விவரம் அறியலாம்:

லயன் எம். கனகலிங்கம் — 589619, 591174 (வீடு)

லயன் டாக்டர் எவ்.ஏ. ராஜேந்திரன் — [illegible] (வீடு)

லயன் எமா ஆர். ஜோசப் — 593522, 503084 (வீடு)

## நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு அதிகரிப்பு!

கொழும்பு கோட்டே ஸ்ரீஜெயவர்த்தனபுரவில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியின் பாதுகாப்பு மேலும் தீவிரமாக்கப் பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

நாடாளுமனறத்தின் பொதுமக்கள் கலரி ஏற்கனவே காலவரையறையின்றி மூடப்பட்டிருந்தது தெரிந்ததே.

புதிதாகக் கொண்டு வரப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளின்படி, நாடாளுமன்ற கட்டடத் தொகுதிப் பக்கம் விருந்தினர்கள் எவரையும் கூட்டிவர வேண்டாம் என நாடாளுமன்ற உறுப்பினர்கள் கேட்கப்பட்டிருக்கின்றார்கள்.

எம். பிக்கள், நாடாளுமன்ற ஊழியர்கள், பாதுகாப்புப் படையினர் தவிர விசேட அனுமதி பெற்ற பத்திரிகையாளர்கள் மட்டுமே தற்போது நாடாளுமன்றத்துக்குச் செல்ல அனுமதிக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஆலோசனை பெறுவதற்காக அமைச்சுக்களின் உயரதிகாரிகளை நாடாளுமன்றத்துக்கு அழைப்பதைக் கூட தவிர்த்துக் கொள்ளுமாறு அமைச்சர்கள் கேடகப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே சமயம் —

கொழும்பின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்பட்டிருப்பதாக அறியவருகின்றது.

அமைச்சர்கள், அரசியல் தலைவர்கள் ஆகியோரின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்டிருந்த படையினர் குறைக்கப்பட்டு, அப்படையினர் வீதிகளிலும், அலுவலகங்களிலும், கேந்திர நிலையங்களிலும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது.

(உ-3-6)

### எட்டுப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

புனர்வாழ்வுக் கழகத்தில் வைத்து, கழகப் பிரதிநிதிகளிடம் இந்த எண்மரையும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் ஒப்படைப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

விடுவிக்கப்பட்ட எட்டுப் பேரினதும் விவரங்கள் வருமாறு:-

★ பசுபதி இராஜேந்திரன் [வயது 26] — பழைய தபால் கந்தோர் வீதி, 7ஆம் கட்டை. சங்கானை வடக்கு — கடந்த ஜூலை 10 ஆம் திகதி ''முன்னேப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போது பிடிபட்டவர்.

★ தம்பையா விஷ்ணுகாந்தன் (வயது 30) — தொட்டிலடி, சங்கானை கிழக்கு — கடந்த ஜூலை 15 ஆம் திகதி இராணுவத்திடம் சிக்கியவர்.

★ செல்லையா கதிர்காமநாதன் (வயது 34) — மாத்தனை, தெல்லிப்பளை — கடந்த ஜூலை 21 ஆம் திகதி துர்க்காபுரம், மல்லாகத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டார்

★ இராசையன் இராசகுமார் (வயது40) — ஆட்டுப்பட்டி, ஆவரங்கால், அச்சுவேலியைச் சேர்ந்தவர். திக்கித் திக்கிப் பேசுபவர்.

★ கோபாலகிருஷ்ணன் கிருஷ்ணகுமார் (வயது 25)— நீதியம்பனை, மல்லாகம் — கடந்த ஜூலை 18 ஆம் திகதி படையினரிடம் சிக்கியவர்.

★ மனுவேற்பிள்ளை வெள்ளையன் (வயது 34) — தண்ணீர்த்தாங்கி வீதி, குருநகர்— கடந்த மாதம் 26 ஆம் திகதி மண்டைதீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்றசமயம் படையினரால் கைது செய்யப்பட்டவர்.

★ வைத்தி பாக்கியநாதன் (வயது45)—சகாயபுரம்,மாதகலைச் சேர்ந்தவர். இடம் பெயர்ந்து குளிப்பன் முகாம், சங்கரத்தை, சங்கானையில் வசித்தவர் — கடந்த மாதம் 25 ஆம் திகதி சில்லாலைப் பகுதிக்கு விறகு வெட்டச் சென்ற சமயம் படையினரால் கைது செய்யப்பட்டவர்.

★ வெள்ளையன் கந்தசுவாமி (வயது 65) குடல் புற்று நோயால் பாதிக்கப்பட்டவர்: ''ஸ்ரெச்சர்'' மூலம் கப்பலிலிருந்து இறக்கப்பட்டு கூட்டிவரப்பட்டவர். புன்னாலைக்கட்டுவன் பகுதியில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

[உ-173]

### வடபகுதியிலிரு...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தடை விதிக்கப்பட்டிருக்கிறது; நிரந்தர 'பாஸ்' வைத்திருப்போர் மட்டுமே கொழும்பு செல்ல முடியும்.

இந்த தடை தொடர்பான அறிவித்தல் வவுனியா ரயில் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது. (உ- ஐ-3)

### தலைகீழாக...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும்—

அவர் மேலும் குறிப்பிட்டார்.

தமக்குத் தெரிந்தவரை மேலும் 55 பொது மக்கள் வரை பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாக விடுவிக்கப்பட்ட மற்றொருவர் தெரிவித்தார். (உ-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா மயில்வாகனம்

வல்வெட்டியைச் பிறப்பிடமாகவும், மல்லாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா - மயில்வாகனம் 29- 11- 95 அன்று புதன்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் அன்னபூரணியின் அன்புக்கணவரும், கந்தையா (கனடா), சிவஞானசுந்தரம் (U.K.), சங்கரப்பிள்ளை (மல்லாகம்), செல்வராணி (கொழும்பு), காலஞ்சென்ற பொன்மணி, திருமதி சிவமணி(கனடா), தில்லைநடேசன் (U.K.), கிருபேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், க. ஜோசப்பின், சாரதாதேவி, புஷ்பவதி, குமாரசாமி, சந்திரசேகரன், தெய்வேந்திரன், நந்தா, சந்திரிக்கா ஆகியோரின் மாமனாரும், மேனகா, சுரேகா, சுரேன், சங்கீதா, பதுமநாபன், செந்தூரன், ஐங்கரன், சுகந்தினி, ரஜனி, கணேந்திரன், கஜன், மயூரன், தில்லையின் இரு பெண் குழந்தைகள் ஆகியோரின் பாட்டனாரும், காலஞ்சென்ற சிற்றம்பலம் [இறைவரி திணைக்கள ஆணையாளர்], காலஞ்சென்ற கதிர்காமநாதன்(நிதிப் பிரிவு), திருமதி சிவகாமசுந்தரி, பரஞ்சோதி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (30-11-95) வியாழக்கிழமை காலை 10 மணிக்கு சரசாலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. சங்கரப்பிள்ளை (மகன்)
''நீலகிரி''
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

குமரேசர் வளவு,
மல்லாகம்.
(89418)

## செல்லத்துரை சுந்தரவேல்

(ஓய்வுபெற்ற தபாலதிபர்)

இடைக்காட்டில் வசித்தவரும், பின்னர் யாழ். அத்தியடியில் வசித்தவரும், தற்போது சங்கத்தானை, பெருங்குளம் வீதியில் வசித்தவருமான செல்லத்துரை சுந்தரவேல் 29-11-95 புதன் காலமாகிவிட்டர்.

அன்னார் காலஞ்சென்ற செல்லத்துரை (ஆசிரியர்) தம்பதிகளின் அன்பு மகனும், உதயநாயகியின் அன்புக் கணவரும், அகிலன் (ட்ரான்ஸ்கி), நகுலன் (கனடா), சுமதி (ட்ரான்ஸ்கி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுந்தரலிங்கம் (ஓய்வுபெற்ற பொலீஸ் உத்தியோகத்தர்), சிவேஸ்வரி (ட்ரான்ஸ்கி), சிவபாக்கியவதி (கனடா), சிவசோதி, (இந்தியா), சிவமங்களவதி (கச்சேரி, கிளிநொச்சி), சன்னதிவேல் (கனடா), சிவமலர் (ட்ரான்ஸ்கி), நடராசபதி (சவுதி), சிவயோகராணி (கொழும்பு), சிவமனோகரி (கனடா), சிவயோகேஸ்வரி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், இராஜரத்தினம் (ட்ரான்ஸ்கி), துரைசிங்கம் (கனடா), சண்முகபாரதி (ட்ரான்ஸ்கி), சோதி முருகேசு (கிளிநொச்சி), சிதம்பரநாதன் (இந்தியா), ஸ்ரீதரன் (கொழும்பு), சிவகனேஷ் (கனடா), செல்வரத்தினம் (மன்னார்). நவரத்தினம் (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வியாழன் [30-11-95] பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

தகவல்:
சு. உதயநாயகி
(மனைவி)

பெருங்குளம் வீதி,
சங்கத்தானை,
சாவகக்சேரி.
(39419)

திருமதி

## மகேஸ்வரி பொன்னம்பலம்

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாக கொண்ட மகேஸ்வரி பொன்னம்பலம் நேற்று (29 - 11 - 95) மறவன்புலோவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அச்சலிங்கம் தம்பதிகளின் அன்பு மகளும், பொன்னம்பலத்தின் அன்பு மனைவியும் குமுதினி, காயத்திரி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மறவன்புலோ மாணிக்கவாசகர் உடையார் தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான ஜனகன், வியாசன், வசிட்டன், ருக்மணி, மற்றும் சாரதா, சரோஜினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பொ. சிவசுப்பிரமணியம் (சித்தன்கேணி), அ. சேனாதிராசா (நீராவியடி), காலஞ்சென்ற தி. சண்முகராசா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற க. மணிவாசகர் (பொறியியலாளர்) க. மனோகரன், க. மகேந்திரன் ஆகியோரின் பெரிய தாயாரும், மயூரதன், சிவசங்கரன், குறமகள், சிவகாந்தன், வேல்விழி, கீதா, கிருஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், தியாகராசா அன்னபூரணியின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், மறவன்புலோ இல்லத்தில் (30 – 11 - 95) இன்று பி. ப. 2.00 மணியளவில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

முருகமூர்த்தி கோவிலடி,
கைதடி, நாவற்குழி,
மறவன்புலோ.
(39420)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் சாவகச்சேரி, சரசாலை தெற்கில் உள்ள அவர்களது தற்காலிகப் பணிமனையில் 30-11-95 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழத்தமிழர் படுகொலையை எதிர்த்து

# இன்று நடக்கும் முழு அ

# தமிழகம் முற்றாக செயலிழக்கு

சென்னை, நவ. 30

ஈழத் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து இன்று தமிழ் நாட்டில் மாநில அரசின் ஆதரவுடன் நடைபெறும் முழு அடைப்பு காரணமாக மாநிலம் இன்று முற்றாகச் செயல் இழக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாநில அரசு அலுவலகங்கள், உள்ளூராட்சி அமைப்புகள், போக்குவரத்து நிறுவங்கள், கடைகள், வங்கிகள், பல்கலைக் கழகங்கள், பள்ளிகள், கல்லூரிகள், திரையங்குகள், ஹோட்டேல்கள் அனைத்தும் இன்று காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை மூடப்பட்டிருக்கும் என்று மாநில அரசு நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சில அத்தியாவசியப் பணிகள் மாத்திரம் வழமை போன்று இயங்கும்.

தமிழக அரசு இன்று பொது விடுமுறையையும் அறிவித்திருக்கின்றது.

இன்றைய முழு அடைப்பை ஒட்டி இன்று நடைபெறவிருந்த அரச மற்றும் பொது வைபவங்கள் ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றன.

பள்ளிகளிலும், பல்லைக் கழகங்களிலும் நடைபெறவிருந்த பல பரீட்சைகளும் ஒத்திப்போடப்பட்டிருப்பதாக இந்திய வானொலி அறிவித்தது.

திராவிட முன்னேற்றக்கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி தி. மு. க பாட்டாளி மக்கள் கட்சி மற்றும் ஆளும் அண்ணா தி. மு. க அரசு ஆகியன இந்த முழு அடைப்புக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

ஈழத் தமிழர் படுகொலை செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறிய தன் மூலம் ஸ்ரீலங்கா அரசுக்கு ஆதரவாக இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் நடந்து கொண்டுள்ளார் என்று தெரிவித்து—

அவரின் போக்குக்கு எதிர்ப்புக் காட்டுவதும் இந்த முழு அடைப்பின் நோக்கம் என முழு அடைப்பை ஏற்பாடு செய்தோர் ஏற்கனவே அறிவித்திருந்தனர்.

எனினும் நரசிம்மராவின் கட்சியான இந்திரா காங்கிரஸின் மாநிலத் தலைமை இந்த முழு அடைப்பை தாங்கள் எதிர்க்கவில்லை என்று அறிவித்துள்ளது.

ஈழத்தில் அப்பாவித் தமிழர் இன்னல்படுவது குறித்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கவலை வெளியிட்டுள்ளது.

(உ-ஐ-3)

### யாழ் நகரில்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏஜென்ஸி ஒன்று இவ்வாறு தகவல் வெளியிட்டது.

முன்னேறிச் செல்லும் படையினர் பல திக்குகளில் இருந்து வருகின்ற வேட்டுகளுக்கு இரையாவதாகவும் அந்த செய்தி ஏஜென்ஸி குறிப்பிட்டது.

யாழ். செயலகத்தை படையினர் சென்றடைந்து விட்டனர் என்று கொழும்பில் நேற்று வதந்தி அடிபட்டதாக மற்றொரு செய்தி நிறுவனம் குறிபிட்டது.

### யாழ். நகர்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு புதிது புதிதாக இராணுவத்தால் நகர்த்தப்பட்டு வருவதாகவும் களச் செய்திகள் தெரிவிக்கின்றன.

யுத்தமுனையில் தற்போது ஈடுபடுத்தப்பட்டிருக்கின்ற ஸ்ரீலங்கா இராணுவத்தின் 53 ஆவது படையணி தொடர்ச்சியாக பேரிழப்புகளை சந்தித்து வருகிறது.

கந்தர்மடம், நல்லூர், கொழும்புத்துறை ஆகிய பகுதிகள் உட்பட பல முனைகளில் நேற்று முன்தினத்தில் இருந்து படையினர் முன்னேற முயல்கின்றபோதும் விடுதலைப் புலிகளின் தாக்குதலால் இராணுவத்தின் நகர்வு மந்தப்படுத்தப்பட்டுள்ளது என களச் செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் —

நல்லூர் கிட்டுப் பூங்காவை படையினர் கைப்பற்றியதாக ரூபவாஹினி அறிவித்தது.

### கிளி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அவற்றில் இருந்த பத்துப் பேரைக் கைது செய்த படையினர் இரு மோட்டார்களையும் இரு மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியதாகவும் —

ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

படையினரின் தாக்குதலில் மற்றும் ஐவர் உயிரிழந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

93 ஆம் ஆண்டு பூநகரி. நாகதேவன்துறை தாக்கி அழிக்கப்பட்ட பின்னர் படகுச் சேவைக்கு கடற்புலிகள் பாதுகாப்பு வழங்குவதை நிறுத்தியிருந்தமை குறிப்பிடத் தக்கது.

(உ-3)

# மரண அறிவித்தல்

## திருமதி மரியஸ்ரெலா றெக்ஸ்

[யோகக்குமாரி]

யாழ்ப்பாணம் டேவிட் றோட். இல. 55 சேர்ந்த திருமதி மரியஸ்ரெலா றெக்ஸ் 29 – 11 – 95 இல் காலமானார்.

இவர் பிரான்ஸிஸ் றெக்ஸின் [பனை தென்னை வள முகாமையாளர்] அன்பு மனைவியும், றொசிட்டா தர்சினி [யாழ். திருக்குடும்ப கன்னியர்மட மாணவி], றொமோல் தர்சன் [சென். பற்றிக்ஸ் மாணவன் போராளி], தசாங்கன் [யாழ். மத்திய கல்லூரி மாணவன்], றொபிசலா ஆகியோரின் அன்புத் தாயாரும், பிரான்ஸிஸ் விக்ரர் [வலி. கிழக்கு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி] அவர்களின் மைத்துனியும் ஆவார்.

இவரின் நல்லடக்க ஆராதனை இன்று (30-11-95) மாலை 3-00 மணிக்கு கொடிகாமம் செபமாலை மாதா ஆலய சேமக்காலையில் நடைபெறும். இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
பிரான்ஸிஸ் றெக்ஸ்
(கணவன்)

தற்போதைய முகவரி:
சீலன் பூங்கா அருகில்,
சீலன் வீதி,
மீசாலை.
(39421)

★ புதிய கிளை நிறுவனம் ★

# இ. சுப்பிரமணியம்

மிதிவண்டி, மிதிவண்டி உதிரிப்பாகங்கள்,
பாவனைப் பொருள்கள்
விற்பனை அகம்

இல. 8, காங்கேசன் நெடுஞ்சாலை, சுன்னாகம்.
இல. 77, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஆகிய முகவரிகளில் வாடிக்கையாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்து வந்த எமது வாணிப நிலையம் தனது புதிய கிளை நிறுவனத்தை

புதிய அங்காடிக் கட்டடம்
கொடிகாமத்தில் (கொடிகாமம் சந்தி)

27 - 11 - 1995 இல் ஆரம்பித்துள்ளதனை அன்புக்குரிய வாடிக்கையாளர் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

(39389)
உரிமையாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org